RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணனின் கரிப்பு மணிகள் நாவலில் வாழ்வியல் போராட்டங்கள்

**இ. காளீஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் 628 215, தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

# Existential Crisis in Rajam Krishnan's Novel Karippu Manigal

**E. Kaleeswari** [a, *]

[a] Department of Tamil, Govindammal Aditanar College for Women, Thiruchendur,628215, Thoothukudi District, Tamilnadu, India

* Corresponding Author: ekaleeswari2017@gmail.com

Received: 03-12-2025
Revised: 28-02-2026
Accepted: 07-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan's novel Karippu Manigal focuses on the brutal lives of salt pan workers in Thoothukudi. The novel portrays their miserable living conditions, the suffering of women, various social issues, and the intensely exploitative and arduous nature of salt workers' lives behind salt production. It vividly depicts the agony of workers laboring under the scorching sun, their poverty, and their inhumane way of life. Written with the intention that literature should function as essential nourishment for society by fostering social consciousness and human values, the novel serves as a powerful voice for social justice. It deeply documents the status of women, the social problems of salt pan workers, exploitation, and their struggles for livelihood. The narrative also highlights the ways in which workers are exploited by salt pan management, including wage deductions and unjust dismissals. Set against the barren landscape of the Thoothukudi salt pans, the novel realistically presents the harsh and bitter realities of the workers' lives.

**Keywords:** Karippu Manigal, Thoothukudi, Social Justice, Salt Pan Workers.

## முன்னுரை

ராஜம் கிருஷ்ணன் எழுதிய 'கரிப்பு மணிகள்' ஒரு முக்கியமான சமூகநாவல். இது தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் கொடிய, யதார்த்தமான வாழ்க்கை மற்றும் அவர்களின் துயரங்களை, போராட்டங்களை, சமூகநீதியின் அவசியத்தை உணர்த்துகிறது. இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற நாவல் ஆகும். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உப்பு உற்பத்தியில் ஈடுபடும் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் சமூகப் பார்வை உடைய நாவல் இது. உப்பளங்களின் இருண்ட உலகையும், அங்கு உழைக்கும் தொழிலாளர்களின் அவலநிலையையும், சமூகத்தின் அடக்குமுறைகளையும், குறிப்பாக பெண்களின் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்பட்ட ஒரு முக்கியமான சமூக நாவலாகும்.

## படைப்பின் நோக்கம்

சாதாரண மக்களின் வாழ்க்கையை, உப்பளத் தொழிலாளர்களின் சோகங்களை வெளிக்கொணர்வதே இந்நாவலின் நோக்கம் ஆகும்.

## கதைக்கரு

உப்பளத் தொழிலாளர்களின் கொடிய வாழ்க்கை, அவர்களின் அவலநிலை, பெண்களின் துயரங்கள், சமூகப் பிரச்சினைகள் மற்றும் உப்பு உற்பத்தியின் பின்னணியில் உள்ள உப்பளத்

தொழிலாளர்களின் கடினமான சுரண்டல் நிறைந்த வாழ்க்கை, வெயிலில் வாடும் மக்களின் அவலம், வறுமை, சுரண்டல், மனிதாபிமானமற்ற வாழ்க்கையை மையமாகக் கொண்டது.

## கதைச்சுருக்கம்

கண்ணுசாமி - மருதாம்பா தம்பதிகளின் குடும்பம் அனுபவிக்கின்ற சொல்லித்தீராத துயரங்கள் மிகுதியாகும். கண்ணுசாமியின் முதல் மனைவி செவந்திக்குப் பிறந்தவர்கள் பொன்னாச்சி, பச்சைமுத்து இருவரும் தாய் இறந்த பிறகு திருச்செந்தூரில் தாய்மாமன் அருணாசலம் வீட்டில் வளர்ந்து வருகிறார்கள். இரண்டாவது மனைவி மருதாம்பா. இவர்கள் இருவரும் 'பனஞ்சோலை அளத்தில்' வேலை பார்த்து வருகின்றனர். உப்பளங்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளை நேரடியாக அறியமாட்டார்கள். கங்காணிகள், கணக்குப் பிள்ளைகள் மூலம் உப்பள நிர்வாகம் நடைபெறும். பல ஆண்டுகள் உப்பளத்தில் வேலை பார்த்து வந்த கண்ணுசாமியின் கண் பார்வை மங்குகிறது. மன உளைச்சலுக்கு ஆளாகும் கண்ணுசாமி நோய்வாய்ப்படுகிறார். தன் மகள் பொன்னாச்சி, மகன் பச்சைமுத்துவைப் பார்க்க ஆசைப்படுகிறார். மருதாம்பா அவர்களை திருச்செந்தூரில் உள்ள மாமன் வீட்டில் இருந்து கூட்டி வந்து பேணிப் பாதுகாக்கிறாள். மாற்றாந்தாய் என்றில்லாமல் அவர்கள்மீது பாசம் கொள்கிறாள் மருதாம்பாள்.

## சமூகப்பார்வை

பெண்களின் நிலை, உப்பளத் தொழிலாளர்களின் சமூகப் பிரச்சினைகள், சுரண்டல், வாழ்வாதாரப் போராட்டங்கள் ஆகியவற்றை ஆழமாகப் பதிவு செய்து சமூக நீதிக்கான குரலாக ஒலிக்கிறது.

## சமூக விழிப்புணர்வு

தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் குறிப்பாக, பெண்களின் கடினமான வாழ்க்கை, சுரண்டல் மற்றும் அவர்களின் போராட்டங்களை வெளிப்படுத்துகிறது.

## நாவலின் சிறப்பு

இலக்கியம் என்பது வெறும் பொழுது போக்கல்ல, அது மக்களின் வாழ்வுக்கு ஆரோக்கியமான சத்துணவுப் போன்று சமூக உணர்வையும், மனிதாபிமானத்தையும் ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நாவல் வெளிவந்துள்ளது.

## உப்பளத் தொழிலாளர்களின் அவலநிலை

குடியிருக்க வீடு, குடிநீர் வசதி, மருத்துவ வசதி ஆகிய எந்த வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. குழந்தைகளின் கல்வி, வார இறுதி நாள் விடுப்பு, உப்பளத் தொழில் இல்லாத நாட்களில் மாற்று வேலை வசதி எதுவுமின்றி அப்பாவி மனிதர்களாகத் தேய்ந்து இருந்தனர்.

## உடல்நிலை பாதிப்பு

உப்பின் வெம்மைக் காரணமாக ஒவ்வொரு தொழிலாளியின் உடல் நலமும் பாதிப்புக்குள்ளானது. கை மற்றும் கால்களில் கொப்புளங்கள் வெடித்து நீர் வடிந்து புண்ணாகின. கண் பார்வை மங்கியது.

## பொன்னாச்சியின் வறுமை

வறுமையின் காரணமாக பொன்னாச்சியும் பச்சைமுத்துவும் உப்பள வேலைக்குச் செல்கிறார்கள். அரசு விதிகளை மீறி குழந்தைத் தொழிலாளர்களின் நிலை அங்கு காணப்படுகிறது. பொன்னாச்சியை அனுபவிக்க கங்காணி நாச்சியப்பன் திட்டம் தீட்டுகிறான்.

## பொன்னாச்சியின் பாதுகாவலன்

உப்பளத்தில் ஹைட்ரா மீட்டர் பொறுப்பில் உள்ள ராமசாமி என்பவன் பொன்னாச்சிக்குப் பாதுகாப்பாக இருக்கிறான். அவர்கள் இருவருக்குமிடையே காதல் மலர்கிறது.

## காண்ட்ராக்ட் நாச்சியப்பனின் செயல்

உயிரற்ற வறட்சியில் பண்புள்ளவர்களின் செவிகளும், நாவும் கூசும் சொற்களை நாச்சியப்பன் பேசியதும் பொன்னாச்சி மருண்டு போனாள். பண்பற்ற வசைச் சொற்களைத் தவிர்த்து மரியாதையாகப் பேசியே அறியார் என்பதை பொன்னாச்சி புரிந்து கொண்டாள். பொன்னாச்சியை கீழ்க்கண்ணால் பார்க்கிறான் நாச்சியப்பன். அவன் பார்வையில் அவள் துடித்துப் போகிறாள். அங்கு வேலை செய்யும் பெண்களில் யாரும் பொன்னாச்சியைப் போல் சூதறியாத பருவத்தினரில்லை.

நாச்சியப்பன் அவளைப் பார்க்கும் பார்வை மட்டுமே ஆகாததாக இல்லை. போகும்போதும் வரும்போதும், கழுத்தில் தொடுவதும், கையைத் தீண்ட முயல்வதும் இன்னும் அருவருப்பான செயல்கள் செய்வதுமாக இருக்கிறான். பேரியாச்சி என்ற கிழவி ஒருத்தி கொத்துப் பலகை போடுவாள். "புதுசா தளதளப்பா இருக்கா, ஏட்டி, ஓம்பாடு சோக்குத்தா. சோலிக்கீலியெல்லா சொம்மா போக்கும் காட்டத்தா….." என்று கேலி செய்தாள். பொன்னாச்சிக்கு நாராசமாக இருந்தது.

## கூலி நிர்ணயம்

உப்பளத்தில் வேலை செய்யும் பெண்களுக்கு கூலி நான்கு ரூபாய் கொடுப்பார்கள். ஆனால் அவர்களுடைய நிர்ணயக்கூலி நாலு ரூபாயும் நாற்பது பைசாவுமாகும். ஆண்களுக்கு நிர்ணயக்கூலி ஆறுரூபாயும் சொச்சமுமாகும். ஆனால் செய்நேர்த்திக் காலத்தில் முழுக்கூலியைக் கண்களால் பார்க்க இயலாது. முன்பெல்லாம் செய்நேர்த்திப் பணிக்கு ஆண்களை மட்டுமே எடுப்பார்கள்.

பெண்கள் பாத்தியில் குவிந்த உப்பைத் தட்டு மேட்டில் கொண்டு சேர்க்கும் பணியைத்தான் பெரும்பாலும் செய்வார்கள். இந்த நாட்களில் ஆடவருக்கு அதிகக்கூலி என்பதால் பெண்களையும், இரண்டு ரூபாய்க் கூலிக்கு வரும் சிறுவன் சிறுமியர்களையும் பாத்தி மிதிக்கச் செய்கிறார்கள். மிதித்து, மிதித்து மண்ணைப் பண்படுத்த வேண்டும். இவ்வாறு பண்படுத்தும் பாத்திகளே உப்பை விளைவிக்கும் 'பெண் பாத்திகளாகும்', ஆண்டுதோறும் தவறாமல் இந்தப் பெண் பாத்திகளுக்குக் குறையாமல் சீரெடுக்க வேண்டும். இந்தப் பாத்திகளில் விளையும் உப்பு வெள்ளை வெளேரென்று தும்பைப்பூ வண்ணத்தில் கற்கண்டைப் போல் தோன்றும்.

## ராமசாமியின் பெற்றோர்கள்

சாத்தப்பன், பாக்கியத்தாச்சியின் ஒரே மகன் ராமசாமி. சாத்தப்பன் உழைக்கும் மக்களுக்காக தொழிற்சங்கம் வச்சி, ஸ்ட்ரைக் பண்ணச் சொல்லி தடியும், கம்புமாக அளத்துக்கூலிகளைப் பயமுறுத்தி வச்சவர். அவரது மகன் ராமசாமி தந்தையின் இறப்பிற்குப் பின் 'பனஞ்சோலை அளத்துல' மாசச் சம்பள வேலை பார்த்து வந்தான்.

## ராமசாமி - பொன்னாச்சி திருமணம்

அருணாசலம், ராமசாமி - பொன்னாச்சியின் திருமணத்தை நடத்துவதற்கு முயற்சி செய்து இனிமையாக நடத்தினார். சண்முகேசுவரன் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. குருக்கள் மணியடித்து மணமக்களுக்காக அருச்சனை செய்கிறார். பொங்கல் பிரசாதம் பெற்று மணமக்களை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் வருகையில் அருணாச்சலத்தின் கண்களிலிருந்து நீரருவி பெருகுகிறது. புட்டும் பயற்றங்கஞ்சியும், பழமும், பப்படமுமாக மாமி அவர்களுக்குக் காலை விருந்தளிக்கிறார்.

## ராமசாமியின் ஆவேசம்

ராமசாமி உப்பளத் தொழிலாளர்களைத் திரட்டிச் சங்கம் அமைக்க முயற்சி செய்கிறான். உப்பின் வெண்மையைப் பார்த்துக் கூசி வெளிச்சமே இல்லாத உலகுக்குள் இருட்டாய் இருக்கும் தொழிலாளர்கள் நிர்வாகத்தை எதிர்த்து நிற்பதற்கு பயப்படுகிறார்கள். போராட்டம் ஒன்றே தங்கள் துயர் துடைக்கும் என ராமசாமி அவர்களிடம் எடுத்துக் கூறுகிறான். 'பனஞ்சோலை அளம்' நிர்வாகம் வேலையிலிருந்து அவனை நீக்குகிறது.

## ராமசாமியின் எதிர்ப்புக்குரல்

ராமசாமி, நாச்சியப்பனின் அடாவடித்தனத்தை தன்னை அழைத்துப் பேசிய முதலாளியிடம் கூறுகிறான். இந்த நாய்ப்பயலை இந்த அளத்தை விட்டு நீங்களே விரட்டலேன்னா ஒங்க பேரு

கெட்டுப்போகும். இவனை நீங்க வெரட்டலே, இல்ல இங்க நடக்கிற அக்கிரமத்தைத் தடுக்கலன்னா, நானே இந்தப் பயலை வெளியே தள்ளுவ ஒருநா. முதலாளி, ராமசாமியை போகச் சொல்லி சாடை காட்டுகிறான். "ஸார், இது ரொம்ப முட்டிப்போன வெவகாரம். நீங்கல்லாம் ரொம்பப் படிச்சவிய நான் தொழிலாளிதா, ஆனாலும் எந்த அக்குரமும்...." அவனை மேல பேசவிடாமல் முதலாளி, 'நான் கவனிக்கிறேன். போன்னு சொல்லிட்டேனில்லே போ. இப்ப உன் வேலையைப்பாரு?" என்று ஆணையிடுகிறார்.

## மருதாம்பாளின் இறப்பு

உப்பளத்தில் நடந்த விபத்தில் கண்ணுசாமி மனைவி மருதாம்பா இறந்து போகிறார் அவருடைய இறப்புக்கு இழப்பீடுக் கொடுப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக நிர்வாகம் அவர் லாரியில் இறந்துவிட்டதாக கேசை ஜோடிக்கிறது போலீஸீம் அதற்குத் துணைபோகிறது.

## தாய்மாமன் அருணாச்சலத்தின் செயல்

பொன்னாச்சியிடம் உண்மையான பாசத்துடன் இருந்த தாய்மாமன் அருணாச்சலம் அவளுடைய திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறார். ராமசாமி - பொன்னாச்சி திருமணம் பல எதிர்ப்புகளையும் மீறி நடக்கிறது. அதே நேரத்தில் உப்பள நிர்வாகத்தினருக்கு எதிரான போராட்டமும் தீவிரமடைகிறது.

## தொழிலாளர்களின் போராட்டங்கள்

செங்கமலத்தாச்சி என்ற மூதாட்டி போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிற்கிறார். ஊர்வலம், ஆர்ப்பாட்டம் எனப் போராட்டம் வலுக்கிறது. உப்பளத் தொழிலாளர்கள் தங்களுக்கான விடியலை நோக்கி வெற்றிநடை போடுகின்றனர். ராமசாமியும், பொன்னாச்சியும் முன்னணி வீரர்களாக களத்தில் நிற்கிறார்கள். பனை மரங்களும், முட்புதர்களும் நிறைந்த பரந்த மணற்காட்டில் அந்தக் கூட்டம் விரைந்து செல்கிறது.

## தொழிலாளர்களின் சுரண்டல்

உப்பள நிர்வாகத்தால் தொழிலாளர்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள், சம்பளத்தில் பிடிப்பு, அநீதியான வேலை நீக்கம் போன்றவை விவரிக்கப்படுகின்றன.

## பெண்கள் மீதான ஒடுக்குமுறை

உப்பளங்களில் பணிபுரியும் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதை நாவல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

## பொருளாதார ஏற்றத்தாழ்வு

உப்பு உற்பத்தியால் முதலாளிகள் லாபம் ஈட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாவதையும், அவர்களின் உழைப்பின் மதிப்பு புறக்கணிக்கப்படுவதையும் காட்டுகிறது.

## யதார்த்த சித்திரிப்பு

தூத்துக்குடி உப்பளங்களின் வறண்ட நிலப்பரப்பில் தொழிலாளர்களின் கடுமையான கசப்பான யதார்த்த வாழ்வைச் சித்திரிக்கிறது.

## முடிவுரை

கரிப்பு மணிகள் நாவலின் தலைப்பு, தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் கடினமான, கரிய வாழ்க்கை மற்றும் உப்பின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. இது உப்பளங்களில் உப்பைப் பிரித்தெடுக்கும் 'கரிப்பு' (கரிய) மணல் மற்றும் உப்பளத் தொழிலாளர்களின் துயரமான, சுரண்டப்படும் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. 'கரிப்பு' என்பது உப்பளத்தில் உப்பைக் காய்ச்சும் போது ஏற்படும் கரிய நிறத்தைக் குறிக்கிறது. இது தொழிலாளர்களின் வாழ்க்கைச் சூழ்நிலைகளின் இருண்ட, கடினமான தன்மையைக் குறிக்கிறது. 'மணிகள்' என்பது உப்பளத்தில் விளையும் உப்பைக் குறிப்பதுடன், அந்த உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் அவர்களின் கண்ணீர்த்துளிகளையும், போராட்டங்களையும் வெளிப்படுத்துகிறது. 'கரிப்பு மணிகள்' என்பது வெறும் கதை அல்ல அது உப்பளத்

தொழிலாளர்களின் வலி, அவர்களின் வாழ்க்கை, சமூக அநீதி ஆகியவற்றை எதிர் கொள்ளும் சக்தி வாய்ந்த சமூக ஆவணம் என்பது தெளிவாகிறது.

## References

ராஜம் கிருஷ்ணன், (2001) கரிப்பு மணிகள், தாகம் பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License